

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஈரோடு மாவட்டம், மேட்டுநாசுவம்பாளையம், காலிங்கராயன்பாளையம் துணை சுகாதார நலவாழ்வு மைய வளாகத்தில் சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்டத்தினை துவக்கி வைத்து, விழிப்புணர்வு பதாகையினை வெளியிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை) மரு. டி.எஸ்.செல்வவிநாயகம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வெ.கி.ச.இளங்கோவன் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாச்சலம் (அந்தியூர்), திருமதி.சி.கே.சரஸ்வதி (மொடக்குறிச்சி), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மரு.மணீஷ், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், ஈரோடு ஊராட்சி மன்றத்தலைவர் பிரகாஷ், மேட்டுநாசுவம்பாளையம் ஊராட்சித் தலைவர் மகேஸ்வரன் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேற்று முன்தினம் (22.11.2033) திருப்பூர் மாநகராட்சி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்திற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, வருகை புரிந்த ”முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை வரவேற்று கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார், ஜி.கிரியப்பனவர் ஆகியோர் உள்ளனர்.

### நகரச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் தலைமை!

# திருப்பத்தூரில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் தொடங்கி வைத்தார்!

*திருப்பத்தூர், நவ. 24 -*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் தொடங்கப்பட்டுள்ள நீட் விலக்கு நம் இலக்கு என்ற நீட்க்கு எதிரான கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டதை தொடர்ந்து

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் நகர கழகம் சார்பில், திருப்பத்தூர் புதுப்பேட்டை ரோடு பகுதியில் நடைபெற்ற நீட் விலக்கு கையெழுத்து இயக்கத்தை திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆவின் தலைவரும், திருப்பத்தூர் நகர செயலாளருமான எஸ்.ராஜேந்திரன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் டி.ரகுநாத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் செ. வெங்கடேசன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மோ.சார்லஸ் நவீன்குமார், மாவட்ட இளைஞரணி து.அமைப்பாளர் டி.எஸ். தமிழ்மணி, நகர இளைஞரணி அமைப்பாளர் டி. எஸ்.மாதேஸ்வரன், ரமணன், திருப்பத்தூர் நகர மன்ற துணைத்தலைவர் ஏ. ஆர்.சபியுல்லா, மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் க.நதிம்அஹமத், பி.தௌலத், எஸ்.பிரபு, நகர மன்ற உறுப்பினர்கள் சுகுணா ரமேஷ், பி.நாகு, கழக நிர்வாகிகள் ஆர்.அரவிந்த், ஞானசேகர், ஜெயனந்த், வீரராகவன், பாலாஜி, எஸ்.ராம், சங்கர், எஸ்.மருதுபாண்டி, டி.பி. பெருமாள், பிரதிஸ், விஜய், கமல் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!



*சேலம், நவ. 24 -*

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி. எம்.செல்வகணபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று ( 24.11.2023 - வெள்ளிக்கிழமை) மதியம் 1.30 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகம், “கலைஞர் மாளிகை”, “வீர பாண்டியார் அரங்கில்”, மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி,

விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, மீனவர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி,

சுற்று சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1) நவம்பர் 27ம் தேதி கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்து.

2) தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பணிகள் குறித்து.

3) நவம்பர் 25, 26 ஆம் தேதிகளில் வாக்காளர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்ய சிறப்பு முகாம் பணிகள் குறித்து.

4) கழக ஆக்கப்பணிகள் குறித்து

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சார்பதிவாளர் அலுவலகங்களில்

# ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு!

*சென்னை, நவ. 24 -*

அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் சுப முகூர்த்த தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப் பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுவது வழக்கம்.

அந்த வகையில் சுபமுகூர்த்த தினமாக கருதப்படும் 23.11.2023 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என எதிர்பார்க்கப்படுவதால் அன்றைய தினம் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் வழங்கப்பட வேண்டும் என பதிவுத்துறைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங் களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லை களுக்கு கூடுதலாக நான்கு தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் என்று பதிவுத்துறை செயலர் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சி, அரசியல் மாமேதை முரசொலி மாறன் அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி. கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., எம்.இராமச்சந்திரன், து.செல்வம், சி.இறைவன், மாநகரக் கழகச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் அஞ்சுகம் பூபதி, ஒன்றியச் செயலாளர்கள், தோ.அருளானந்தசாமி, ச.முரசொலி, செல்வகுமார், கார்த்திகேயன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

# அம்பத்தூர் வடக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. தொடங்கி வைக்கிறார்! ஜோசப் சாமுவேல் தலைமை!

*சென்னை,நவ.24 -*

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் (நவ. 24 -25- 26) முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் நாளை 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி ராஜேஸ்வரி நவராஜ் மஹால், ஒரகடம், அம்பத்தூர். (அம்பேத்கர் சிலை அருகில்) நடைபெறுகிறது.

ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார்.

கழக நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் .டி. ஆர்.பாலு எம்.பி. மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு , பி.கே.மூர்த்தி, பகுதிச் செயலாளர்கள் டி.எஸ். பி.இராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்ஜி.சாந்தகுமாரி, விரமேஷ் (எ) நீலகண்டன், எல்.பி.எப். மோகன், ஏ.பி.பூர்ணிமா, ஜி.வி.நாகவள்ளி, து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், மா. பச்சையப்பன், க.முரளிபாபு, அ.செல்வம், க.கதிஜா, மா.ரமேஷ், வீரராகவன், ராதாகிருஷ்ணன், மு.இரகு, த.கண்ணபிரான், எம்.கமல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பி.வி.மூர்த்தி, பொன். நவராஜ்ரவி, க.ஜீவா, எஸ். பி.அரிகிருஷ்ணன் , மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி, ஆ.இரா. அருண், கோ.சேகர்லால் ஆகியோர் வரவேற்கின்றனர்.

அம்பத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை கழக மருத்துவ அணித் தலைவர் கழக செய்தி தொடர்பாளர் திருமதி. கனிமொழி என். வி.என்.சோமு துவக்கி வைக்கிறார்.

இதில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றிஅழகன், ப.தாயகம்கவி, இ.பரந்தாமன், கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பி. டி.சி.செல்வராஜ் உள்ளிட்ட மாவட்டத்திற்குட்பட்ட கழக மாநில நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

வீ.ரவீந்திரன் நன்றி கூறுகிறார்.


37ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன்
தோளோடு தோள் நின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னோடித்தலைவர்
ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்ட தி.மு.க.வின்
15 ஆண்டு கால முன்னாள் மாவட்டச்செயலாளர்,
திருவண்ணாமலை தொகுதியின் 10 ஆண்டுகால (1957-1967)பாராளுமன்ற உறுப்பினர்,
தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் முன்னாள் பெருந்தலைவர்,
வடஆற்காடு விற்பனைக்குழுவின் 10ஆண்டு கால (1968-1978) தலைவர்,
திருவண்ணாமலை நகர மன்றத்தின் 5ஆண்டு காலம்(1970-1975) தலைவர்
கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்
என்றும் நினைவில் வாழும்
திருவண்ணாமலை
இரா.தர்மலிங்கம் Ex.MP
அவர்களின் 37ஆம் ஆண்டு நினைவு தினத்தில்
அன்னாரின் நிலைத்த புகழை போற்றி வணங்குகிறோம்..

தோற்றம் : 03-10-1923
மறைவு : 24-11-1986



நீங்கள் வகுத்துத்தந்த கழகப்பாதையில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்
தளபதி மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு எ.வ.வேலு — பொதுப்பணித்துறை (ம) நெடுஞ்சாலை துறை அமைச்சர்
மாண்புமிகு கு.பிச்சாண்டி — சட்டப்பேரவை துணை சபாநாயகர்
ஆகியோர்களது வழியில் பாதை மாறா பயணம் தொடரும்
என்றும் உங்கள் அன்பின் நினைவில்
மகன் : நினைவில்வாழும் இரா.த.சம்பத் மருமகள் : கல்பனாசம்பத்
பேரன்கள் : எஸ்.கிருபாசங்கர் எஸ்.தினேஷ்
JAGAN ADS - 9962969675
குடும்பத்தினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புக்கள், திருவண்ணாமலை